

International Society for Krishna Consciousness

Founder Acharya: his Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada

Regd. Head Office - Hare Krishna Land, Juhu, Mumbai, Reg No.F2179 (BOM)

ISKCON CHENNAI

Hare Krishna Land, Bhaktivedanta Swami Road, Off ECR, Akkarai, Sholinganallur, Chennai-119.

Ph: 044-24456199/24413466. Email:iskconchennai@gmail.com Web:www.iskconchennai.org

# பத்திரிக்கை செய்தி

25 May 2024

**பொருள்: இஸ்கான் வழங்கும் குழந்தைகள் மற்றும் டீன் ஏஜ் வயதினருக்கான வாராந்திர நற்பண்பு கல்வி**
**காலம்: ஜூன் 16 முதல் மார்ச் 30 வரை, வாரம் ஒரு முறை**
**முறை: ஆன்லைன் மற்றும் நேரடி வகுப்புகள்**
**மொழி: தமிழ் மற்றும் ஆங்கிலம்**

இஸ்கான் சென்னை, ஆன்லைன் மற்றும் நேரடியாக, வாரம் ஒருமுறை, குழந்தைகள் மற்றும் டீன் ஏஜ் வயதினருக்கான நற்பண்பு கல்வியை, 'பாரதத்தின் சூர்ய வம்ச மன்னர்கள் ' என்ற தலைப்பில் வழங்குகிறது. பயிற்றுவிக்கும் ஊடகம் ஆங்கிலம் அல்லது தமிழ்.

பங்கேற்பாளர்கள் கடவுள் பக்தி, நல்ல குணங்கள் மற்றும் நமது கலாச்சாரத்தைக் கற்றுக்கொள்வதன் மூலம் பயனடைகிறார்கள். அவர்களின் மனம் ஒருமுகப்படும் மற்றும் நினைவாற்றல் அதிகரிக்கும்.

குழந்தைகள் (6 முதல் 12 வயது வரை) கதைகள், வினாடி வினாக்கள், ஸ்லோகங்கள், பஜனைகள், தீயில்லா சமையல், கலை மற்றும் கைவினைப் பயிற்சிகள் ஆகியவற்றின் மூலம் கற்பதில் மகிழ்ச்சி அடைவார்கள். டீன் ஏஜ் வயதினர் (13-17 வயது) தலைப்பு சார்ந்த கதைகள், விவாதங்கள், ஒரு நிமிட உரை(JAM) மூலம் வேடிக்கையாகக் கற்கிறார்கள்.

வகுப்புகள் ஜூன் மாதம் மத்தியிலிருந்து மார்ச் வரை நீடிக்கும். ஒவ்வொரு வகுப்பின் கால அளவு 1.5 - 2 மணி நேரம். பல்வேறு வகுப்பு நேரங்கள் உள்ளன. உங்கள் வசதிக்கேற்ற வகுப்பை தேர்ந்தெடுத்து, குறைந்த கட்டணத்தில் பதிவு செய்யுங்கள்.

பாட சம்பந்தப்பட்ட ஆவணங்கள், காணொளிகள் ஆகியவை கூகுள் வகுப்பறை மூலம் பங்கேற்பாளர்களுக்குப் பகிரப்படும். படிப்பை முடித்தவுடன் பங்கேற்பாளர்கள் சான்றிதழைப் பெறுவார்கள்.

மேலும் விவரங்களுக்கு மற்றும் வகுப்பில் பதிவு செய்வதற்கு www.iskconchennai.org/bpss என்ற இணையதளத்தை அணுகவும்.

தங்களின் கேள்விகளுக்கு, **iskconchennaionline@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் அல்லது **8072599295** என்ற எண்ணில் அழைக்கவும்.

மேற்கூறிய செய்தியை,
வாசகர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில்,
தங்களின் மதிப்புமிக்க நாளிதழ்களில் வெளியிடுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறோம்.

உங்கள் சேவையில்,

Ranga Krishna Das

ரங்க கிருஷ்ண தாஸ்
கோவில் நிர்வாக குழு,
இஸ்கான் சென்னை